நவம்பர் - 2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 1

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



23-10-2012 அன்று மதுரைத் தமிழ்ச்சங்க நூலகத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவில் கலந்துகொண்ட இருபெரும் செயலர்கள், முதன்மையர், முதல்வர் மற்றும் பணியாளர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்
பகுதி : 1 திருவள்ளுவர் ஆண்டு 2043
நவம்பர் 2012



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழ் ஆங்கிலம் : உடம்படு மெய்கள் மீள் பார்த்தபின் ஒரு தெளிநோக்கு | பேராசிரியர் வெ. பெருமாள்சாமி | 5 |
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள் | சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி | 11 |
| கீரனூர் ஜாகிர் ராஜாவின் புதினங்கள் காட்டும் இசுலாமியர் நம்பிக்கைகள் – ஓர் இனவரைவியல் பார்வை | த. மாலினி | 16 |
| நற்றிணையில் வண்ணம் | வே. ஸ்ரீதேவி | 22 |
| தேடல் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 28 |
| சீவகசிந்தாமணியில் நிமித்தங்கள் – ஓர் இனவரைவியல் பார்வை | க. கனிமொழி | 29 |
| நற்றிணையில் பாடவேறுபாடு | ப. நிர்மலா | 36 |

# இதழ் மணம்

அன்புடையீர், வணக்கம் !

நவம்பர் மாத இதழ் "தீபஒளித்திருநாள்" வாழ்த்துக்களை வழங்கித் தங்கள் கைகளில் பெருமையுடன் தவழ்கிறது. "தமிழ், ஆங்கிலம் உடம்படுமெய்கள்" தடை விடைகளோடு இம்மாத இதழிலும் தொடர்கிறது. திருமிகு வெ. பெருமாள்சாமி அவர்கள் "மீள்பார்த்த பின் ஒரு தெளி நோக்காக சில எழுதியுள்ளேன்" எனத் தொடர்கிறார். நம் தமிழின் உயர்திணைச் சிறப்பைக் குறைத்துக் கூறி பிறமொழியை உயர்த்துதல் என் நோக்கம் இல்லை என்றும் தெளிவுபடுத்துகிறார். உலக மொழியின் சில தன்மைகள் நம் தமிழ் இலக்கண நெறியோடு பொருந்துவதை நிறுவ முயல்கிறார். எனினும் இதற்கும் நமது மரபு வழிப்பட்ட செந்தமிழ் இதழ் அறிஞர்களின் கருத்தை அறிய ஆசைப்படுகிறது. அடுத்த மாத இதழ் இன்னும் செழுமையுறும் என்பதில் ஐயமில்லை.

முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் "திருக்குறளின் தோற்றக்களம்" எனும் கட்டுரை, சென்ற மாத இதழ் தொடர்ச்சியாக இம்மாத இதழில் நிறைவு பெறுகிறது. இசுலாமியர்களின் சமய நம்பிக்கைகள், ஆவி நம்பிக்கைகள், மந்திரம், கனவுகள் குறித்த நம்பிக்கைகள் போன்றன கீரனூர் ஜாகீர் ராஜாவின் புதினங்களிலிருந்து அண்ணாமலைநகர் மாலினி அவர்கள் மிகச் சிறந்த வகையில் எடுத்துக் காட்டியுள்ளது பாராட்டிற்குரியது.

எழுத்து, சொல், தொடை, ஓசை, வடிவ அடிப்படையில் இருபது வண்ணங்களை நற்றிணையில் வண்ணம் எனும் கட்டுரையில் வே. ஸ்ரீதேவி அவர்கள் கட்டுரை தந்து தன் ஆய்வுத் தன்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனித வாழ்க்கையில் நிமித்தம் பார்த்தல் என்பது அன்றாட வாழ்க்கையில் காணப்படுவதே என்பதை க. கனிமொழி அவர்களும், நற்றிணையில் பாட வேறுபாடு பற்றி பா. நிர்மலா அவர்களும் கட்டுரை தந்து சிறப்பிக்கின்றனர்.

கவிவேந்தர் கா. வேழவேந்தன், புலவர் சி. பாண்டுரங்கன் ஆகிய இருவரின் மரபுக் கவிதைகளும் வாசகர் வாசகங்களும் இம்மாத இதழில் இடம் பெற்று நமது இதழ் பொலிவு பெறுகிறது.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

**பேராசிரியர் வெ. பெருமாள்சாமி**
எம்.ஏ., பி.காம்.,

அன்பாலயம்
மனை எண். 58, முதல் அவென்யூ
வெட்டுவாங்கேணி
அடையாறு ஆனந்தபவன் எதிரில்
சென்னை – 600 115

நாள் : 29.10.2012

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். செப்டம்பர் 2012 'செந்தமிழ்' இதழில் 'தமிழில் ஆங்கிலம் – உடம்படு மெய்கள்' என்னும் கட்டுரையை வெளியிட்டமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தட்டிக்கொடுத்து ஊக்குவித்த முனைவர் த. பெரியாண்டவன் அவர்களுக்கும், தடையெழுப்பி மீண்டும் ஆழ்ந்தும் அகன்றும் விளக்க வாய்ப்பளித்த திரு. தெ. முருகசாமி அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

தமிழைப் புதிது புதிதாக ஆய்வு செய்து சுவைத்த சிறப்புடையது மதுரைத் தமிழ்ச் சங்கம். "நில நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார் புலனாவில் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதன்றோ" தலைவன் திரும்பி வருவான் என்கிறது கலித்தொகை.

விவாதங்கள் கருத்துச் செழுமையை வளர்த்தன என்பது கொங்குதேர் வாழ்க்கை'க் காலத்திலிருந்தே தமிழ்ச் சங்க வரலாறு. "உலகியல் நிறுத்தும் பொருள் மரபொடுங்க மாறனும் புலவரும் மயங்குறு காலை.... தமிழ்ச்சுவை திரட்டிக் கொடுத்த தென்தமிழ்க் கடவுள்" ( கல்லாடம் ) என எடுத்துக் காட்டுகிறார் பண்டிதர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (நக்கீரர். 1934)

"அறிஞர்களின் கருத்து வெளிப்பாடுகளை வெளியிட நமது செந்தமிழ் இதழ் எந்தக் காலத்திலும் தயங்கியதில்லை'' என்று இதழ் மணம்' பரப்புவது பெருமதிப்புடைய கூற்று. முன்பேயே, "தமிழ் மொழிக்கு வடமொழி செவிலித்தாயா?" – என்று "செந்தமிழி"ல் ஸ்ரீமான் சு. இராஜையனாரவர்கள் எழுதிய கருத்துரைக்குத் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் எதிருரை வரைந்த மரபுடையது நம் இதழ் (இலக்கணச் சிந்தனைகள் – இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம், சென்னை – 122).

குற்றம் என்பதாலேயே அன்று, குறை இருந்தால் குற்றமே. மீள்பார்த்த அளவில் தெளிநோக்காகச் சில எழுதியுள்ளேன். யார் யார் வாய்க் கேட்பினும் சீர்தூக்கும் கோல் போல்வார் நிறை காண்பர்.

நன்றி.

அன்புடன்,

பேராசிரியர் வெ. பெருமாள்சாமி

## தமிழ் ஆங்கிலம் : உடம்படு மெய்கள்
# மீள் பார்த்தபின் ஒரு தெளிநோக்கு

பேராசிரியர்
வெ. பெருமாள்சாமி

ஆங்கிலத்திலும் உடம்படு மெய்கள் காணப்படுகின்றன என்னும் பொருளில் செப்டம்பர் 2012 இதழில் வெளியான நம் கருத்துக்கள் மீள்பார்வைக்கு உரியன எனத் திரு. தெ. முருகசாமி அவர்கள் அக்டோபர் 2012 இதழில் தடைகளை எழுப்பியிருந்தார். அவற்றை விடுவிக்க முயல்வோம்.

ஒப்பீடு என்பது யார்க்கும் உரிய இயல்பான முனைப்பு. ஒரு குழந்தையின் முன் இரு தின்பொருள்களை நீட்டினால் இரண்டையும் சுவைத்து ஒப்பிட்டுச் சுவை மிகுந்ததை விரும்பி உண்ணுமல்லவா?

இரண்டு அல்லது மேற்பட்ட மொழிகளின் மொழியியல் கூறுகளை ஒப்பிடலாம் ( ஒப்பிலக்கணம் ). வெவ்வேறு இலக்கியங்களை ஒப்பிடலாம் (ஒப்பிலக்கியம்). கலைகள் ஒப்பிடப்படுகின்றன. உரோமானிய அறிஞர் ஒரேசு (Horace) 'ஓவியம் போன்றதே கவிதை' என்றாராம். எனவே, ஒப்பீடு செய்கையில் முதன்மையாக வேண்டப்படுவது ஒத்த பண்புகள். பவளவாய் என்கையில் நிறம் மட்டுமே ஒற்றுமை. அவற்றின் திண்மை மென்மை அன்று.

நம் மொழிக் கல்வியில் ஒப்பாய்வு ஒரு புதிய துறையாக முகிழ்த்து வெகுவாக வளர்ந்து விட்டது. கால்டுவெல்லார் திராவிட மொழிகளை ஒப்பிட்டார். அவ்வாறு இன மொழிகளை மட்டுமன்றிப் பிற மொழிகளையும் ஒப்பிடல் ஏற்புடைத்தே. நம் முதல் ஆசிரியர் தொல்காப்பியரே தமிழோடு இனமல்லாத வடமொழியை ஒப்பிட்டு, "அகத்தெழு வளியிசை... அளபில் கோடல் அந்தணர் மறைத்தே, அஃது இவண் நுவலாது, .... புறத்து இசைக்கும்... அளபு நுவன்றிசினே " ( தொல். எழுத்து ) என்று மாத்திரையளவைக் கூறுகிறார்.

ஒப்பியன் மொழிநூல் எழுதிய மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் வேர்ச் சொற்களை ஆராய்ந்து தமிழோடு வடமொழியை மட்டுமன்றிப்

பிறமொழிகளையும் ஒப்பிட்டு விளக்கினார். 'பாதம்' என்பது வடசொல் என்றும், Path (பாத்) என்பது ஆங்கிலச் சொல் என்றும் எண்ணியிருந்த கருத்துகளை மாற்றிப் 'பதி' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து,

பதி → பதித்தல் → பாதம் → பாதை → Path (ஆங்கிலம்) → Pedal (ஆங்கிலம்)

என்ற சொற்கள் தோன்றின என்றார். இவை போலும் பல வேர்ச்சொற்களை ஆய்ந்த அவர் தமிழே முதற்றாய் மொழி என்னும் முடிவுக்கு வந்தார்.

இன்னும் 'தமிழ் சப்பானிய ஒப்பாய்வு' என்னும் நூலில் அம்மொழியில் தமிழ்ச் சொற்கள் வழங்குகின்றன என்று முன்னைத் துணைவேந்தர் பொற்கோ அவர்கள் கண்டு தெரிவித்ததும், 'எபிறேய மொழியில் தமிழின் வேர்ச்சொற்கள் ' இருப்பதைத் திரு. ம.சே. விக்டர் அவர்கள் ஆய்வு செய்திருப்பதும் நம் மொழியியல் ஒப்பாய்வின் பரப்பை அறைந்து முழங்குகின்றன.

"ஆங்கிலத்தில், ஓரடியுள் வரும் சீர் எண்ணிக்கையால் அடிகள் பெயர் பெறுதலும் உண்டு. மிக அடிக்கடி பயன்படுவன நாற்சீரடியும் ஐஞ்சீரடியுமேயாகும். தமிழிலும் நாற்சீரடியே மிக அதிகமாகப் பயன்பட்டபடியால் 'அடி' என்று பொதுவாகச் சொன்னால் அது நாற்சீரடியையே குறிப்பது வழக்காயிற்று.... ஓரடியை எல்லையாக வைத்துக் கொண்டு இலக்கணம் கூறுகிற மரபு கிரேக்க, ஆங்கில மொழிகளிலும் தமிழிலும் ஒரு படித்தாகக் காணப்படுகிறது." எனத் தமிழண்ணல் டாக்டர் இராம. பெரியகருப்பன் அவர்கள் 'சங்க இலக்கிய ஒப்பீடு, முதற்பாகம், இலக்கியக் கொள்கைகள்" என்னும் நூலில் (பக்கம். 109, 110) ஆய்வு செய்கிறார்.

| சீர் எண்ணிக்கை | தமிழில் பெயர் | ஆங்கிலத்தில் பெயர் |
|---|---|---|
| இருசீரடி | குறளடி | dimeter |
| நாற்சீரடி | அளவடி | tetrameter |
| ஐஞ்சீரடி | நெடிலடி | pentameter |

யாப்பிலக்கண ஒப்பீடு உண்டாயின் எழுத்திலக்கண ஒப்பீடும் ஆமென்க.

இனித் தடைகளை ஒவ்வொன்றாய் மீளப் பார்ப்போம் :

1. 'O'-வின் உச்சரிப்பு வேறு வேறு. பதின் கவனம் என்ற வரையறையில் சொற்களை வரையறுக்க முடியாது.

தமிழ் உயிரெழுத்து ஒவ்வொன்றும் அவ்வவற்றுக்குரிய ஒலியுடைத்தாய் இருக்கையில், ஆங்கிலத்தில் ஒவ்வொரு உயிரொலிக்கும் சிலபல வடிவ எழுத்துகள் பயன்படுத்தப்படுவதும், ஒரு வரி வடிவம் பல்வேறு விதமாக ஒலிக்கப்படுவதும் காண்கிறோம். இதனைச் சுட்டிக்காட்ட 'O' என்கிற உயிரெழுத்தை எடுத்து வைத்து எடுத்துக்காட்டுக்காக நாமாக ஒரு தொடரைப் படைத்துக் கொண்டு, முதல் இடை இறுதி எனப் பாகுபடுத்தாமல் 'O' பத்து விதமாக ஒலிக்கப்படுவதை விளக்கினோம். அவ்வளவே. 'O' பத்து ஒலிகளாக மட்டுமே வழங்கப்படுகிறது என வரையறை எதுவும் நாம் வகுக்கவில்லை. பத்துக்கும் மேலாக ஒலிக்கப்படுவதை அறிந்தால் அவற்றையும் ஏற்போம். அது நாம் கூற முனைந்த கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே அமையும். தமிழின் வரிவடிவும் ஒலிவடிவும் சிறப்புக்குரிய தனித்தன்மையை உடையன எனக் காட்டவே ஆங்கில உயிரின் இயலாமையைச் சுட்டிக் காட்டினோம். தன் மறுப்புரையின் இறுதியில் தான் கூறும் கருத்தோடு அவரே இத்தடையின் வழி மாறுபடுகிறார்.

அவருடைய இத்தடையில், 'ON, ONION என்ற சொற்களில் 'O' உச்சரிப்பு வேறு வேறானவையாகும்' என்று கூறப்பட்டுள்ளது. ON, ONION என்ற சொற்களில், இரண்டு இடங்களில் 'ஆ' வாகவும் ஓரிடத்தில் 'அ' வாகவும் ஒலிக்கக் காண்கிறோம். நம் பட்டியல்களிலேயே இவ்விரு ஒலி உச்சரிப்புகளைக் கீழுள்ள காட்டுகளின் வழி விளக்கியுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| d<u>o</u>ne, | c<u>o</u>me | = | 'அ' |
| t<u>o</u>p, | n<u>o</u>t | = | 'ஆ' |

இவை 11-வது 12-வது உச்சரிப்புகள் அல்ல. பத்து அவதாரங்களுக்குள்ளேயே அடக்கம். வேறு சொல்லில் வேறு உச்சரிப்பு இருப்பின் ஏற்போம்.

2. உச்சரிப்பையோ உடம்படு மெய் பற்றியோ தமிழோடு ஒப்பிட்டறிய வாய்ப்பே இல்லை. ஒப்பாகக் கூற முயற்சிப்பது வலிந்து கூறுவதாக அமையும்.

ஆங்கிலம் தான் எழுதுவது ஒன்று சொல்வது இன்னொன்றாயிற்றே என்று குறிப்பிட்ட நாம், வரி வடிவத்தைப் பெரிதும் சாராமல் உச்சரிப்பையே

அதிகம் ஒப்பிட்டோம். அம்மொழியில் உச்சரிப்பு அளவில் யகர (y), வகர (v, w) உடம்படு மெய்கள் வருமிடங்களை ஆங்கிலப் பேரகராதியின் துணைகொண்டு பட்டியலிட்டுள்ளோம். ஏனெனில் எழுத்தென்பவை உச்சரிக்கப்படுவன என்பதே முகாமையானது. அதனாலேயே அவை பிறக்கும் பொருந்தும் இடங்களையும், இசைக்கப்படும் (ஒலிக்கப்படும்) மாத்திரை அளவுகளையும் நம் ஆசிரியர்கள் வகுத்துள்ளனர். தமிழில் உச்சரிக்கும் போது உடம்படு மெய் தோன்ற உச்சரிக்கிறோம். ஆங்கிலத்திலும் அதே ஒலிகள் (y, v, w) உயிர்களிடை வருமாறு உச்சரிக்கிற நேர்வுகள் உள்ளன. அந்த அளவிலேயே நாம் ஒத்த தன்மையைக் காண்கிறோம். இரு மொழிகளிலும் ஒத்த கூறுகள் வருமிடங்களை காய்தல் உவத்தலின்றி ஒன்றாக எண்ணிப் பார்த்தலில் வலிந்து கொள்வது ஒன்றுமில்லை.

3. ஆங்கிலத்திற்குள்ளேயும் பொருத்தப்பாடில்லை. TIE என்றால் ஒரு துணி; ING என்றால் என்ன பொருள்?

TIE என்றால் ஒரு துணி என்பது மட்டும் தான் பொருள் எனத் துணிதல் வேண்டா. TIE என்பது 'கட்டு' என்கிற வினைப் பகுதியைக் குறிக்கும். அதனோடு ING என்னும் விகுதி அல்லது பின்னொட்டு (Suffix) சேர்கையில் 'கட்டுதல்' (Tying) எனத் தொழிற்பெயராகவும், 'கட்டிக்கொண்டு' (Tying) எனத் தொடர்கால (Continuous tense) வினையாகவும் பொருள் தருவதைக் காணலாம். எனவே, ING என்பது பொருள் குறித்தே வினையடி (பகுதி) யோடு இணைகிறது.

4. GO + ING என்ற உயிரும் உயிரும் சேரும் போது எந்த உடம்படு மெய் உருவானது?

நாம் நம் கட்டுரையில் ஆங்கிலத்தில் சொற்புணர்ச்சி இல்லை என்று குறித்துள்ளோம். அம்மொழியில் உடம்படு மெய் தோன்றா இடங்கள் பல உள. எனின் அவ்வாறே ஆகுக. அவற்றோடு நம் ஒப்பீடு இல்லை. தமிழிலும் உடம்படு மெய் இடை வராத இடங்களும் சில உண்டே. அவற்றோடு ஒருங்கு வைப்போம்.

(எ.டு) கதவு + அடைப்பு = கதவடைப்பு
இரவு + அச்சம் = இரவச்சம்
தாங்க + அருந்தவம் = தாங்கருந்தவம்
செப்ப + அருங்குணத்து இராமன் = செப்பருங்குணத்து இராமன்

5. தமிழில் உயிரும் உயிரும் சேரும் இரு சொற்களும் பொருளுடையன. PERU + IAN இந் இரண்டிற்கும் என்ன பொருள்? பொருள் பொருத்தம் இல்லாததால் முறையன்று. உயிரெழுத்தும் உயிரெழுத்தும் என்றது மட்டும் காரணமாகாது. உயிர்ப்பான பொருள் இருக்க வேண்டும். இதுதான் தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும்.

நிலைமொழியும் வருமொழியும் மட்டுமல்ல; தமிழில் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" ( தொல். சொல் ). மொழிகள் எல்லாமே உணர்வை, எண்ணத்தைக், கருத்தை வெளிப்படுப்படுத்துவன தாம். மாற்றுத்திறனாளி வெளிப்படுத்தும் சைகை மொழி கூட பொருள் புலப்படுத்துகிறது. பொருள் புலப்படுத்த வேண்டும் என்பதை விவாதமின்றி அனைவரும் ஏற்பர். பொருளைப் புலப்படுத்த மொழியை உச்சரிக்கையில் ஏற்படும் மாற்றம் மாற்றமின்மை பற்றியே நம் கருத்துகள்.

ஆங்கிலத்துடனான உடம்படுமெய் ஒப்பீட்டில் மறுப்புக்கு வாய்ப்பில்லாத ஒரு சொல் PERU + IAN = PERU + V + IAN = PERUVIAN. உச்சரிப்பினால் மட்டுமின்றி, வரிவடிவ வகரம் (V) பெய்தும் வழங்கப்படும் சொல் அது. PERU ( பெரு ) என்பது தென்னமரிக்கா கண்டத்திலுள்ள ஒரு நாடு. IAN என்பது உரிமைப் பொருளில் வருகிற உருபுவிகுதி அல்லது பின்னொட்டு. நம் மொழியிலும் 'அன்' முதலிய விகுதிகளும், 'இன்' முதலிய சாரியைகளும் சொல் அல்லவாயினும் சொல்லோடு இணைந்து பொருளோ ஓசையோ நல்குகின்றன. அப்போதும் உடம்படு மெய்யின் தோற்றம் உண்டு.

போ + இன் + ஆன் = போயினான்

அது போன்றே IAN என்பதும் PERU என்கிற நாட்டின் பெயரோடு இணைந்து உரிமைப் பொருளைக் குறிப்பிடும் பின்னொட்டு ஆகும்.

இந்தியா + அன் = இந்தியன்
India + n = Indian (இந்தியன், இந்திய)
Indian Culture = இந்தியப் பண்பாடு
Tamil + IAN = Tamilian = தமிழன்
Tamilian Culture = தமிழர் பண்பாடு
Tamilian food = தமிழர் உணவு
PERU + V + IAN = PERUVIAN = பெரு நாட்டின், பெரு மக்களின்
PERUVIAN CULTURE = பெருநாட்டு மக்களின் பண்பாடு
PERUVIAN FOOD = பெருமக்களின் உணவு

Tamilian என்ற சொல்லின் IAN என்னும் பின்னொட்டு உரிமைப் பொருளில் சேர்வது போன்றே Peruvian என்னும் சொற்சேர்க்கையையும் உணரலாம். இதனை மேலும் தொடர்வது பள்ளி வகுப்புப் பாடமாதல் அஞ்சி, ஆங்கிலத்திலும் பொருள் குறித்தே சொற்கள் இயங்குகின்றன என்பதால், தடைகள் விலகுகின்றன என இத்துடன் விடுவோம்.

ஆங்கிலத்தில் உடம்படு மெய் உச்சரித்தாலும் இலக்கண விதி அவர்களிடம் இல்லை என நாம் முன்பே குறித்துள்ளோம். 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலில்' (நன்னூல்) என்பதற்கேற்ப இலக்கியம் முதற்கண். இலக்கணம் பின்னது. ஆங்கிலத்தில் உடம்படு மெய் வழங்கும் இலக்கியம் உண்டு. இலக்கணம் (Technical Term) இல்லை. எனில் நம் தொல்காப்பிய நன்னூல் விதிகள் அம்மொழி ஒலிப்பு முறைக்கும் பொருந்தும் எனல் நம் மொழியின் செம்மையையே உரத்துக் கூறும். வீரமாமுனிவர், ஜி.யு. போப், கால்டுவெல் ஐயர், போன்ற மேனாட்டு அறிஞர்கள் சிறப்பித்துப் புகழ்ந்த நம் தமிழின் உயர்தனிச் சிறப்பைக் குறைத்துக் கூறிப் பிற மொழியை உயர்த்துதல் நம் நோக்கமன்று. ஆங்கிலம் போலும் உலக மொழியின் சில தன்மைகள் நம் இலக்கண நெறியோடு பொருந்துவதை அறிவியல் நோக்கில், நம் மொழியின் தனிச்சிறப்பை, உணர்வு வயப்படாமல் ஆய்வு செய்து நிறுவுவது நமக்கெல்லாம் கடமையே.

" உவமையணி பற்றி விளக்கம் கூற வந்த இளம்பூரணர், 'புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' அதன் பயன் என்றார். உவமையணியின் இவ்விளக்கம் ஒப்பீட்டிற்கும் பொருந்தும்" என்கிறார் முனைவர் தமிழண்ணல் ( நூல் : ஒப்பிலக்கிய அறிமுகம், பக்கம் 21)

ஆங்கில ஒலிப்பியல் பயிற்சியில்லாத நம்மவர் நம் தமிழைப் போன்றே அம்மொழியில் ஒலித் தன்மைகள் உள்ளனவற்றை அறிமுகம் பெறுவதற்கும், ஆங்கிலமும் அதன் ஒலிப்பியலும் தெரிந்து தமிழிலக்கணம் அறியாதார் நாம் நம் மொழியில் உடம்படு மெய்யைப் பயின்று வழங்குவதோடு அதற்கு இலக்கணமும் வகுத்துள்ளோம் என வியந்து அறிவதற்கும் இம்முயற்சி வழி கோலும். அவ்வாறான அறிமுகமும் அறிதலும் இனிதான முருகுணர்ச்சியை நல்கும் என்பது ஒப்பாய்வு முன்னோர்களைப் போன்றே எமக்கும் முடிந்த முடிபாகும்.

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்

## (தொடர்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி
கோபி

5. நீடுவாழ்வார் (3, 6) (இங்கு 854, 880 முதலான பாக்களும் வினைத் திட்பம், அதனால் வரும் மனத்திட்பம் காண்க)
6. அமிழ்தம் – பெண் – மழை (11, 1106) (வான்சிறப்பு மற்றும் காமத்துப்பால் காண்க)
7. பண்பு உடையார்ப் பட்டு உண்டு உலகம் (996) (அத்துடன் நடுக்கற்ற காட்சி, துளக்கற்ற காட்சி, அறிவுடைமை காண்க.
8. ஐயத்தின் நீங்கி (353) இங்கு ஒரு செய்து பிறப் பிறப்பினைத் தடுக்கும் சித்தர் நெறி என்னும் அறிவர் நெறியும் - அகத்துள் வெட்ட வெளி என்னும் வாகை இன்பம் காணும் திறனும் விளக்கக் காண்க.)
9. கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் (356) என்ற குறள் வழி தெள்ளத் தெளிய பிறவாமைக்குரிய நெறி காட்டக் காண்க.
10. வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (50) என்ற குறள்வழி மாந்த வாழ்வின் வானுயிர் நோக்கம் கூறக் காண்க.

இவற்றுடன் நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இவ்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், நிலையாமை, அவா அறுத்தல், மெய்யுணர்தல், வினைத் திட்பம், வினைத் தூய்மை, குடி செயல் வகை, ஊழ், கயமை போன்ற அதிகாரங்களையும் காணல் வேண்டும். இவற்றின் வழி குறளின் ஆழ அகல அடித்தள நோக்கும் உண்மையும் அறிதல் வேண்டும்.

நீத்தார் பெருமை, துறவு என்பன இன்று பிழைபட உணர்த்தப்பட்டுள்ளன. தனக்கென வாழாது மாந்த நலத்துக்கும் வளத்துக்கும் உழைக்கும் சான்றோரே நீத்தார், துறவியர் என அறிதல் வேண்டும். எல்லாரும் எல்லாமும் பெற உழைப்போரே அறவோர். தவத்தின் உருவும், ஊழின் நிலையும் அவ்வாறே பிறழ உணர்த்தப்படக் காண்க.

இயல்புக் கோட்பாடும், இயற்கைக் கோட்பாடுமே ஊழியல் என்பதை அறிதல் வேண்டும். வறுமை, நல்குரவு, இரவு யாவும் மனிதன் படைத்த கேடுகளே என்பதை

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (1062)

என்ற குறள் கூறும் புரட்சியால் காண்க. ( இன்று இச்சொல் ( புரட்சி ) திரைப்பட மாயையால் தகுதியற்ற கயமையாளர்க்கும் வழங்கக் காண்க ) வினைத் திட்பம், வினைத் தூய்மை, குடி செயல் வகை இல்லாத நம் மக்கள் இழிவின் அழிவின் விளிம்பில் நிற்கக் காண்க. புண்புடையார் அருகச் சிறியர் பெருகக் கயமை அரசியல், பொருளியல் வளரக் காண்க. இவற்றையும் திருவள்ளுவர் எடுத்துரைத்திடக் காண்க.

"காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்
கதில ஏதிலார் நூல்" (440) என்ற குறள் காண்க.

இக்குறட்பாவுக்குக் கிடந்த வழிப் பொருள் காணாமல் மாற்றிப் பொருள் காணும் மடமையும் நடக்கக் காண்க.

அறியாமையைக் காதலிப்பதை மக்கள் விட்டுத் தொலைக்க வேண்டும் (திருவள்ளுவர் காலத்தும் தமிழ் மக்கள் அறியாமை போற்றிக் கொண்டனர் என்பதை இதனால் அறியலாம், அது காதலுக்குரியது அன்று ( இன்று திரைப்பட, அரசியல் கயவர்களைப் போற்றிக் காதலிக்கும் கயமை காண்க ) அதுமட்டுமன்று, அயலவர் நூலில் ஏதுமில்லை என்பதையும் காண்க (வேதம் என்று போற்றத் தக்கது ஏதும் இல்லை என்ற உண்மையும் காண்க ) இவற்றையெல்லாம் வென்று எடுக்கத் தமிழர் கண்ட அறவியல் மெய்யியல்மாயிருந்து திருக்குறளாம் என்பதையும் அறிக.

**அறவியல் மெய்யியல் அடித்தளக் குறட்பாக்கள்**

குறட்பா எண்கள் 37, 39, 40, 46, 48, 49, 76, 96, 163, 179, 181, 182, 183, 185, 189, 204, 248, 296, 297, 323, 441, 501 ஆகியவற்றையும் பார்க்க. மேலும் மெய்யுணர்தல் அதிகாரத்துள் 322, 315, 300, 311, 312 முதலான குறட்பாக்களையும் காண்க. உலகப் பார்வை தமிழர் பார்வை. ஆனால் இன்று உலகம் தமிழரைப் பார்க்கும் பார்வை எத்தகையது? அதற்காக நாம் நமது பார்வையை மாற்றிக் கொள்ள இயலாது. தமிழே உலகின் மூத்த முதன்மொழி, தமிழ் மக்களே உலகின் மூத்த குடிகள் மட்டுமன்றி உலகெங்கும் பரவினர் என்பதையும் நாம் அறியும் போது நமது உலகியல் பார்வையால் வியப்பேதும் இல்லை. மெக்சிக்கோ பழங்குடி மக்களாகிய மயன் இன மக்களும், தென் அமெரிக்காப் பிரேசிலில் உள்ள இன்கா பழங்குடி மக்களும் இன்றும் தமிழ் பேசிடக் காண்க. இவ்வாறு உலகெங்கும் தமிழர் (குமரிக் கண்டத் தமிழர்) பரவினர் என்பது சீனா, யப்பான் போன்ற மொழிகளும் தமிழின் வழிவந்தவை என்பதையும் அறிய முடியும். சீன மெய்யியலும் தமிழர் மெய்யியலுடன் இணைந்து செல்வதைக் குன்றக்குடி "மக்கள் சிந்தனையில் வரும் எமது கட்டுரைத் தொடரால் அறியலாம். எனவே இங்கு மிக மிகச் சுருங்கிய அளவில் அறவியல் மெய்யியல் அடித்தளம் விளக்கம் பெறும். உலகியல் ஏற்றத் தாழ்வினைக் கற்பிக்க ஆரிய பிராமணர் முயன்றனர். அதை ஏற்காத குறளாசான் "அறத்தாறு இதுவென வேண்டா" ( 37 ) என்றார். மற்றும், "அறத்தான் வருவதே இன்பம்" ( 39 ) அதனால் "செயற்பாலது அறனே" (40) என உரைப்பது காண்க. எனவே அறவியலே திருக்குறளின் அடித்தளம் என்பது உறுதியாகக் காண்க.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றல்" (46)

"ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை" (48)

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" (49)

மேலும், "அறத்திற்கே அன்பு சார்பு என்பர் அறியார்" (76)

"அறன்கடை நின்றார்" (142)

"அறன் வரையான்" (150)

"அறன் அறிந்து" (179)
"அறங் கூறான்" (181)
"அறன் நோக்கி" (189)
"அறம்பிற செய்யாமை நன்று" (29)
"அறிவினான் ஆகுவதுண்டோ" (315)
"அறவினை கொல்லாமை" (321)
"யாதெனின் யாதெனின் நீங்கியான்" (341)

மற்றும் துறவு அதிகாரத்தையும் சேர்க்க வள்ளுவத்தின் அறவியல் மெய்யியல் அடித்தளம் புரியும்.

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே" (354) (இங்குத் தமிழ்ச் சித்தர்கள் கண்ட ஓகுநெறி வழிச்சாவாத இறவாத பேரின்பம் பெருவாழ்வுக்கு வழிகாட்டக் காண்க.)

அத்துடன் "காமம் வெகுளி மயக்கம்" நோய் (360) என்பதால் காமத்துப் பாலின் மெய்யியல் அடித்தளம் மாந்தவினச் செம்மையே என்பதும் அறியப்படும். அத்துடன் "வேண்டாமை விழுச் செல்வம்" (363) என்பதால் செல்வம் என்பதன் நுட்பம் புலப்படும். ஆதலால், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக, மாசு அற்றவர் ஆகுக. "அஞ்சுவது அறனே" (366) என அறிக. இயல்புவழி அறிந்து இயற்கை உணர்க. அதன்வழி ஊழியல் அறிக (ஊழிற் பெருவழி யாவுள (380). மாசறு காட்சியும் செயிர்தீர் காட்சியும் அறிக. உலகியல் நுட்பம் உணர்க அகம் நிறைத்து அதன்வழிப் புறம் நிறைக்க. புறம் கடந்த அண்டம் அறிக. அதுவே மெய்யியல் அடித்தளம் ஆகும்.

## முடிவுரை

முடிவாகக் கீழ்க்கண்ட உண்மைகள் தோற்றம் பெறும்.

1. அறவியல் மெய்யியலே அனைத்தும்.
2. உலகக் கேடுகட்குக் கரணியம் அறக்கேடே.
3. அறம்தலை நிறுத்தலே திருக்குறளின் அடித்தளம்.

அதனால், மாந்தன் மீ மாந்தன் ஆகுக. பின்னர் அவனே அறவோர் ஆகுக. அதன் பின்னர் தெய்வ நிலை பெறுக என்று தமிழ்ச் சித்தர் வழிக்குறளாசான் உரைத்திடக் காண்க. எனவே இக்கட்டுரையால் திருக்குறளின் தெய்வக் கோட்பாடு, இம்மை மறுமைக் கோட்பாடு வரும் கட்டுரைகளால் விளக்கப்படும் எனினும் இங்கும் ஓரளவுக்கு விளக்கம் தந்துள்ளோம். இதனால் குறளின் உயிர்ப்பு அறவியல் என்பதும் உயிரியக்கம் மெய்யியல் என்பதும் உணரப்படும்.

---

## வாசகர் வாசகம் ①

### செந்தமிழைப் போற்று !

தமிழோடே ஆங்கிலத்தின் இயல்பு தன்னை
தகைமையுற வகைப்படுத்தி தமிழின் மேன்மை
கமழ்மணமாய் நுகர்வித்துக் கம்பன் காட்டும்
கவித்துவத்தை விரித்துரைத்துப் பெருமை சாற்றி
நமதுயர்ந்த பிறன்மனையை நோக்கா போக்கை
நளினமுற கலித்தொகையின் மரபின் மாற்ற
அமைப்பையுமே அடுக்கடுக்காய் எடுத்தியம்பி
அறமுணர்த்தும் செந்தமிழாம் இதழைப் போற்று!

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

---

## வாசகர் வாசகம் ②

### நேரிசை வெண்பா

பத்தழகு பெற்ற பாவைப் போலழகு காட்டுகின்ற
இத்திங்கள் செந்தமிழ் ஈந்துவத்தல் : – நித்திலம் நேர்
அட்டைஉள் செய்திபடம், கட்டுரைஜ, முப்பா, சீர்
இட்டகடிதம் ! நல் அழகு !

அன்புடன்,
**புலவர் சி. பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# கீரனூர் ஜாகிர் ராஜாவின் புதினங்கள் காட்டும் இசுலாமியர் நம்பிக்கைகள் – ஓர் இனவரைவியல் பார்வை

த. மாலினி
அண்ணாமலை நகர்

## முன்னுரை

மனித வாழ்வில் நம்பிக்கைகள் முதன்மையானவைகளாகவும் மிகவும் அழுத்தமானவைகளாகவும் இருப்பதைக் காண முடிகிறது. இந்நம்பிக்கைகள் சமயத்திற்கு சமயம், பண்பாட்டிற்கு பண்பாடு மாறுபடக் கூடியனவாக இருக்கின்றன. தொன்மை மக்கள் முதல் நவீன மக்கள் வரையிலான கால கட்டத்திலும் இந்நம்பிக்கைகள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. நம்பிக்கைகள் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுவனவாகவும் அமைகின்றன. அவ்வகையில், கீரனூர் ஜாகிர் ராஜாவின் புதினங்களான மீன்காரத் தெரு, மீன்குகைவாசிகள் ஆகிய புதினங்களை வாசிக்கின்ற போது இப்புதினங்களின் ஊடாக இசுலாமியர்களின் நம்பிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கட்டுரை இசுலாமியர்களின் சமய நம்பிக்கைகள், ஆவி நம்பிக்கைகள், மந்திரம், கனவுகள் குறித்த நம்பிக்கைகள், குலக்குறி நம்பிக்கைகள் குறித்து பேசுவதாக அமைந்துள்ளது.

## சமய நம்பிக்கைகள்

சமயத்தின் தோற்றம் குறித்துப் பல்வேறான கருத்துகளை மானிடவியலாளர்கள் முன் வைக்கின்றனர். சமயத்தின் தோற்றம் குறித்து விளக்கும் ஈ.பி. டைலர், ''சமயம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து உருவானது" என்பார். எனவே சமயம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது நம்பிக்கையே எனலாம். மனிதன் தன்னை விட ஆற்றல் வாய்ந்த ஒன்றின்மீது நம்பிக்கை வைத்ததன் விளைவே சமய நம்பிக்கை உருவாகக் காரணம் என்றும் கூற முடிகிறது. இக்கருத்தை மேக்ஸ் முல்லர் குறிப்பிடும் போது "சமய நம்பிக்கை என்பது முதன் முதலில் இயற்கை ஆற்றலின் மீது ஏற்பட்டிருக்க வேண்டும் என்று" கூறுவார். எனவே

நம்பிக்கையானது தொன்று தொட்டு வளர்ந்து வரக்கூடிய ஒரு கூறாக அமைவதைக் காண முடிகிறது.

இசுலாமியர்களின் நம்பிக்கைகள் குறித்து இருபுதினங்களின் ( மீன் காரத்தெரு, மீன்குகைவாசிகள் ) வழிநின்று நாம்தெரிந்து கொள்ளலாம். இசுலாமியர்கள் ஓரிறைக் கோட்பாட்டை உடையவர்கள். அல்லாவைத் தவிர வேறு கடவுளரை வழிபடாதவர்கள். உருவ வழிபாடு செய்தல் பாவம். அல்லாவிற்கு இணையாக உருவம் செய்து வழிபடுபவர்களுக்கு கிடைக்கும் தண்டனை நரகம் என்னும் நம்பிக்கையை உடையவர்கள். புனிதத் தன்மை வாய்ந்த குரான் இச்சமயத்தவரின் வேதமாகப் போற்றப்படுகிறது. குரானுக்கு இணையாக வேறு ஒன்றினையும் வைத்துப் பேசக் கூடாது. அவ்வாறு பேசுவது பாவச் செயலாகக் கருதப்படுகிறது. இச்செய்தியை "மீன்குகைவாசிகள்" புதினத்தில் சலீம் – ஆமினா உரையாடல் மூலம் ஆசிரியர் சுட்டிக் காட்டுவதைக் காணமுடிகிறது. "ஆமி குரான் ஓதும் போது தமிழ் விளக்கம் வச்சு காட்சிகளா யோசிக்க ஆரம்பிச்சுடாத, தப்பித் தவறிக் கூட அதப்படமா வரைய நெனச்சுராத பாவம். மகாபாவம். அப்புறமா இணை வச்சேன்னு ஒன்னெ நரகத்துல தூக்கி வீசிடுவாங்க" என்பதைக் காணலாம்.

மேலும் இசுலாமியர்கள் தங்கள் வாழ்நாளின் இறுதியில் உயிர்வாங்க இஸ்ராயீல் என்னும் தூதன் வருவான். உயிரைப் பறித்துச் செல்லும் இஸ்ராயீல் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என்ற நம்பிக்கையுடையவர்களாக இருப்பதைக் காணலாம். இந்நம்பிக்கை இந்துக்களின் கடைசியில் உயிரை பறித்துச் செல்ல 'எமன்' பாசக் கயிற்றுடன் வருவான் என்னும் நம்பிக்கையுடன் ஒத்திருப்பதை அறிய முடிகிறது. இறைவனைப் பற்றியும், இறைத் தூதுவர்களைப் பற்றியும் தவறாக எண்ணுதல், பள்ளிவாசல், தருகா ( தர்ஹா ) போன்ற புனித இடங்களைப் பற்றித் தவறாகப் பேசுதல் போன்றவை பாவம் என்ற நம்பிக்கையை உடையவர்களாக இருப்பதை இப்புதினங்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. இதுபோன்ற சமய நம்பிக்கைகளை இசுலாமியர்கள் கொண்டிருக்கின்றனர்.

## ஆவி நம்பிக்கை

உயிருடைய மற்றும் உயிரற்ற பொருட்களுக்குள் ஆவி வகைப்பட்ட ஓர் உட்பொருள் இருப்பதாக நம்பும் வழக்கத்தை 'ஆவி நம்பிக்கை' (Animism)

எனக் குறிப்பிடுவர். இதன்படி ஒவ்வொரு உயிரினத்திற்கு உள்ளும் அந்த உயிரினத்தை ஒத்த ஆவி இருப்பதாக நம்பப்படுகிறது. தொன்மை மக்கள் ஆவி குறித்து 'நிழல்' அல்லது 'மறைவு' என்பதை குறிக்கிறது என்றும், ஆவியின் தன்மையை அது தங்கும் உடல் என்னும் கலத்தில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் எனக் கருதினர் என்பார் பக்தவத்சல பாரதி.

மேலும், இந்த ஆவி நம்பிக்கைக் கூறுகளின் மாறுபட்ட வடிவங்களை இன்று பல்வேறான சமயங்களிலும் நாம் காண இயலும். ஆனாலும் இசுலாமியர்களிடம் உள்ளதாக இப்புதினம் மூலம் கூறப்படும் ஆவி நம்பிக்கைகளை நாம் தொன்மை மக்களின் நம்பிக்கையிலிருந்து எழுந்த எச்சங்களாகவும் கொள்ளலாம். இவர்கள் தர்ஹாவைப் பற்றியும் அதில் அடங்கியுள்ள ஆவியைப் பற்றியும் தவறாகப் பேசக் கூடாது. அப்படிப் பேசினால் தர்ஹாவில் அடங்கியுள்ள ஆவி தன்னைத் தவறாகப் பேசினவருக்கு எதிராகச் செயல்பட்டு அவருக்குப் பல்வேறான தீமைகளை விளைவிக்கும் என்னும் நம்பிக்கைக் கொள்வதை 'மீன்குகை வாசிகள்' புதினத்தின் வழியாக ஆசிரியர் பின்வருமாறு கூறுவதைக் காணலாம். "பள்ளிவாசத்தே... தருகான்டா தருகாததேம்..... அத நாக்குல பல்லுப் போட்டுப் பேச நமக்கு அருகதயில்லேடி. நீயுங் கைப்புள்ள வச்சுருக்கிறவதான. பாத்து நெதானமாப் பேசு. தாயும் புள்ளயுமா அடங்குனவ கோவப்பட்டான்டா தாறுமாறா எதும் நடந்தறப்போகுது" என்று கூறுவதிலிருந்து ஆவிகள் பற்றி இவர்களது நம்பிக்கைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

### கனவுகள் குறித்த நம்பிக்கைகள்

கனவுகள் குறித்தும் கனவுகளுக்குப் பலன் உண்டு என்பதிலும் இசுலாமியர்கள் நம்பிக்கையுடையவர்களாக விளங்குகின்றனர். பொதுவாக, கனவுகள் குறித்து நல்லகனா, தீக்கனா என்று இருவகையாகப் பிரிப்பர். கனவுகள் கண்டு அக்கனவின் படியே நிகழ்ந்த நிகழ்வை நாம் இலக்கியங்களில் பல இடங்களில் காணலாம். பின்னர் நிகழப் போவதை முன்கூட்டி கனவுகள் வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. வண்ணான் மகன் சுப்பு கண்ட கனவு பற்றி நாம் ' மீன்குகை வாசிகள்' புதினத்தில் பார்க்கும் போது, அவன் பள்ளிவாசல் மினராக்களில் ( கோபுரங்கள் ) ஒன்று இடிந்து விழுவதாகக் கனவு கண்டான் என்பதைக் காணலாம். இக்கனவு தீக்கனவாகக் கருதப்படுகிறது. இதை அவன் தன் தாயிடம் கூறுகிறான். இக்கனவின்படியே அவன் வாழ்க்கையில் பல்வேறான தீயக்காரியங்கள் நிகழ்ந்ததையும்

ஆசிரியர் காட்டுகிறார்.

ஊரில் பெண்கள் கூடிப் பேசும் போது இக்கனவின் பலனைக் கூறுகின்றனர். கோபுரம் இடிந்து விழுவதாகக் கண்ட கனவால் தான் சுப்பு வாழ்க்கைப் பாழாய்ப் போய்விட்டது என்றும், ஏன் அவனுக்கும் புத்தி சரியில்லாமல் பழனியில் சுற்ற வேண்டிய நிலை வந்தது என்றும் கருதி கனவிற்கான பலனை நம்புகின்றனர். இச்செய்தியை,

"............ வண்ணேம் பைய்யெ சுப்பு இருக்கறான்ல ஒருநா ராத்திரீ நம்மூர்ப் பள்ளிவாச மனரா ரெண்டுல ஒண்ணு இடிஞ்சு விழுந்தர்றாப்ல கெனாக் கண்ட்ருக்கான்ல.... இஸ்துரிப் பொட்டி மேஜகீஜ கவுண்டம்மார்ட்ட வாங்கிக் கொண்டாந்து தேச்சுத் தரலாம்டு வச்சுருந்த கொள்ளாத்துணிமணி எல்லாத்தியும் எவனுகளோ ஒரே ரவ்வுல திருடீட்டுப் போயிட்டானுக... கலியாணம் மூச்சேங் எட்டே நாள்ல அவபொண்டாட்டிக்காரி நாண்டுகுட்டுச் செத்துப்போனா.... இப்ப புத்தி சுவாதீனமில்லாம பழனில சுத்தீட்டுத் திரியறானாமா...." என்பதிலிருந்து இசுலாமியர்க்ளிடம் கனவுகள் மற்றும் கனவுகளுக்கான பலன் குறித்த நம்பிக்கைகளை அறிய ஏதுவாகிறது.

## மந்திரம் குறித்த நம்பிக்கைகள்

ஆதி சமய நம்பிக்கைகளுள் மந்திரமும் அடங்கும். குறிப்பிட்ட செயல்முறைப்படி சடங்குகளை நிகழ்த்தும் போதும், மற்றும் மந்திரங்களைக் கூறும் போதும் ஆவிகள் அச்செயல்களை நிகழ்த்தும் மனிதர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. மனித விருப்பங்களுக்கு ஏற்ப மந்திரத்தின் மூலம் ஆவியைக் கீழ்ப்படியச் செய்ய முடியும்.

ஜேம்ஸ் ஃபிரேசர் என்னும் மானிடவியலாளர் மந்திரத்தை இருவகையாகக் குறிப்பார். ஒன்று நன்மை அளிக்கும் மந்திரம், மற்றது தீமை அளிக்கும் மந்திரம் ஃபிரேசர் குறிப்பிடும் மந்திரத்தில் தீமை அளிக்கும் மந்திரத்தை 'மீன்காரத் தெரு' புதினம் அடையாளப்படுத்துகிறது. ஹனீபா ராவுத்தர் தன் சொத்துக்களை இழந்து மீன்காரத் தெருவிற்கு வாடகை வீட்டிற்குக் குடி வருகிறார். அவரை கண்ட போது ஷேக்கா பின்வருமாறு குறிப்பிடுகிறார். "..........பெரிய குடும்பம்...... எல்லாம் காலக் கொடுமல. அவுங்க வாழ்ந்த வாழ்க்கையென்ன இப்பக் கெடக்குற நெலமையென்ன.... மலபார் தங்களோட மாந்த்ரீக மகிமையில குடும்பம் சுக்குநூறா ஒடஞ்சு திக்கத்

தெரியாமப் போயிட்டாங்கல்ல" என்ற செய்தி மூலம் தங்கள்களின் (மந்திரவாதி) மந்திரம் மூலம் தான் ஹனீபா இந்நிலையை அடைந்தார் என்ற மந்திர நம்பிக்கை இசுலாமியர்களிடம் இருப்பதை அறிய முடிகிறது. மந்திரத்தால் பகைவருடைய சொத்துகள் அழிந்து விடுகின்ற நிலையையும் இப்புதினத்தில் காணலாம்.

## குலக்குறி நம்பிக்கை

இன்றையச் சமயங்களுக்கும் குலக்குறி (Totem) நம்பிக்கைக்குமான தொடர்பை ஆராய்ந்தவர் எமிலி துர்க்கெய்ம் என்னும் பிரஞ்சு மானிடவியலாளர். குலக்குறி என்பது ஒரு குறிப்பிட்ட குலக்குழு தன் வாழ்விடம் சார்ந்து அதிகம் புழக்கத்தில் உள்ள ஒரு பொருளையோ, உயிரினத்தையோ அல்லது அவற்றின் ஏதோ ஒரு பாகத்தையோ தனது குழுவின் அடையாளமாகக் கொள்வது. அது அக்குழுவின் தன்மையைச் சுட்டுவதாக அமையும். மேலும், குலக்குறிப் பொருள் பவித்திரமான ஒன்றாக அந்த குலக்குழுவினரால் பாதுகாக்கப்படுகிறது.

குலக்குறி பற்றி குறிப்பிடுகையில் பக்தவத்சல பாரதி பின்வருமாறு குறிப்பிடுகிறார். அவையாவன,

"குலக்குறியைக் கொண்டுள்ள குழுவினர் அதைத் துணைவன், உறவினன், பாதுகாப்பவன், மூதாதையர் என நம்புவர். ஒவ்வொரு குலத்தவரும் ( குழுவினரும் ) குலக்குறிக்குத் தனிப்பட்ட பெயரோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர். பெரும்பாலும் குலக்குறியின் பெயரையே அக்குழுவினரும் கொண்டிருப்பர்... குலக்குறியைச் சில நிகழ்ச்சிகள் தவிரப் பொதுவாக உண்ணவோ, கொல்லவோ மறுப்பர். குலக்குறிக்கு முறையான வழிபாடுகள் செய்வர்" என்று கூறுகிறார்.

இவ்விதக் குலக்குறி நம்பிக்கை இசுலாமியர்களிடம் உள்ளதை இப்புதினத்தின் வழிநின்று மட்டும் அறுதியிட்டுக் கூற முடியாது என்றாலும், இப்புதினம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ள சில விவரங்களை முன் வைத்து அதற்கான சாத்தியம் இருக்க வாய்ப்புண்டு என்பதை அறிய முடிகிறது.

'மீன்காரத் தெரு' வழியாக இசுலாமிய மீன்காரர்கள் தங்களுக்கு மிகவும் புழக்கத்தில் உள்ள மீனையே தங்கள் குலக்குறியாகக் கொண்டுள்ளதைப் பார்க்கலாம். மேலும், குலக்குறியாகக் கொண்டுள்ள

மீனை 'குரான் தேவதை' எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். இந்த 'குரான் தேவதை மீனில் அரபு லிபிகள்' பதிந்துள்ளனர் என்னும் நம்பிக்கைக் கொண்டு அதைப் பாதுகாத்து வருவதைக் காணலாம். மூதாதையர்கள் இந்த மீனின் உடலில் பதிந்திருப்பதாகவும் கருதுகின்றனர். இசுலாமியர்கள் குலக்குறியாகக் கொண்டுள்ள மீனை உண்ணக் கூடாது, மீறி உண்பவர்கள் சாபத்திற்குள்ளாவார்கள் என நம்புவதைக் காணலாம். இதனை, திருப்பூர் ஹஜ்ரத் கூறுவதாக ஆசிரியர் கூறுவதைக் காணலாம். "இது விசேஷமான மீனாக்கும். சொர்க்கத்தின் தடாகத்தில் நீந்தின ஜீவன். இதைச் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் பத்வா கிடைச்சிடும். இந்த மீனை விலைகுடுத்து வாங்க இந்த துனியாவில ஆள் இல்லே. நீ ஒரு காரியஞ் செய். இதை எடுத்துக் கொண்டு போய் பள்ளியில் உள்ள ஹவுஜ்ஜில் விடு நீந்தட்டும்" என்பதிலிருந்து குறிப்பிடலாம். ஆகவே, மேற்கூறிய கருத்துகளை வைத்துப் பார்க்கும் போது இசுலாமியர்களிடமும் குலக்குறி நம்பிக்கை இருக்கிறது என்ற செய்தியை நாம் அறிய முடிக்றது.

## முடிவுரை

மேற்கூரிய நம்பிக்கைகள் யாவும் இசுலாமிய மக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். அந்த வகையில் கீரனூர் ஜாகிர் ராஜாவின் மீன்காரத் தெரு, மின்குகைவாசிகள் ஆகிய இரு புதினங்களும் இனவரைவியல் சார்ந்த செய்திகளை முன்வைப்பதில் முதன்மை வகிக்கின்றன எனலாம்.

## வாசகர் வாசகம் (3)

தொகைநூலுள் பறவைகளின் இயல்பைக் காட்டி
தூயவள்ள லார்புகழை எடுத்தியம்பி
வகைப்படுத்தி மருதத்தின் பெருமை போற்றி
வாழ்வியலில் அறன்இல்ல அன்னை யோடு
மிகுசிறப்பாய் இலக்கியத்துள் சக்தி பற்றி
மேன்மையுறு கட்டுரைப்பும் கொட்டித்தந்து
நிகரில்லா திருக்குறள்சொல் நெறிபுகட்டி
நெஞ்சத்தை ஈர்க்கும்செந் தமிழ்தான் வாழ்க.

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

# நற்றிணையில் வண்ணம்

வே. ஸ்ரீதேவி
அண்ணாமலை நகர்

## முன்னுரை

பாவின்கண் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்தங்களின் வேறுபாடு வண்ணமாகும். இதனை இருபது வகைகளாகக் கூறியுள்ளார் தொல்காப்பியர். அவர் கூறிய இருபது வகையான வண்ணங்களில் சிலவற்றை மட்டும் நற்றிணையில் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## நற்றிணை

மனித வாழ்வியலுக்குத் தேவையான ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் நூல் நற்றிணையாகும். இவற்றில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் அகவற் பாக்களால் ஆனது. 9 அடிச் சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்டவை. மக்களின் அறவாழ்க்கை, மன்னனின் ஆட்சி சிறப்பு, பழந்தமிழரின் வாழ்வியல் சிந்தனைகள், உவமை, உள்ளுறை, இறைச்சி போன்ற அணி நலன்கள் பல உள்ளன. அவற்றில் வண்ணம் பற்றியவை மட்டும் சிறப்புற விளக்கப்படுகிறது.

## வண்ணம் அமையும்முறை

வண்ணம் என்பது "நால்வகைப் பாவின்கண் நிகழும் ஓசை விகற்பாகிய சந்த வேறுபாடாகும்". இவ்வண்ண வகைககள் செய்யுள் முழுவதுமே அமைவனவாகக் கூறல் இயலாது என்றும் ஒரு பாடலின் சில அடிகளில் கூட ஒரு வண்ணம் வரப்பெறும் என்றும் ஒரே பாடலில் பல வண்ணங்களும் வரக்கூடுமென்றும் பேராசிரியர் விளக்குகின்றார். இளம்பூரணர் பாடல் முழுவதுமே பெரும்பான்மையும் வண்ணம் பயின்று வருமென்று சுட்டுகிறார்.

## வண்ண வகை

"வண்ணம் தானே நாலைந்து என்ப"

என்பது தொல்காப்பிய நூற்பா. இலக்கணம் இருபது வகைப்படும். அவை எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை என்ற ஐந்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன என்பது தொல்காப்பியர் கூற்று.

### எழுத்து அடிப்படையின

1. வல்லிசை வண்ணம்
2. மெல்லிசை வண்ணம்
3. இயைபு வண்ணம்
4. நெடுஞ்சீர் வண்ணம்
5. குறுஞ்சீர் வண்ணம்
6. சித்திர வண்ணம்
7. நலிபு வண்ணம்

### சொல் அல்லது சீர் அடிப்படையின

8. பா அ வண்ணம்
9. எண்ணு வண்ணம்
10. ஏந்தல் வண்ணம்

### தொடை அடிப்படையின

11. தா அ வண்ணம்
12. அளபெடை வண்ணம்

### ஓசை அடிப்படையின

13. ஒழுகு வண்ணம்
14. ஓரூஉ வண்ணம்
15. அகைப்பு வண்ணம்
16. தூங்கல் வண்ணம்
17. உருட்டு வண்ணம்
18. முடுகு வண்ணம்

### வடிவ அல்லது நடை அடிப்படையின

19. அகப்பாட்டு வண்ணம்
20. புறப்பாட்டு வண்ணம்

## வல்லிசை வண்ணம்

வல்லெழுத்துக்களான க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு எழுத்துக்கள் அதிகமாகப் பயின்று வரக்கூடிய வண்ணம் வல்லிசை வண்ணம் நற்றிணையில் இவ்வண்ணம் அமைவதை,

"உடை கடற் படப்பை எம் உறைவின் ஊர்க்கே"

என்ற பாடல் வரி உணர்த்துகிறது.

## மெல்லிசை வண்ணம்

ங, ஞ, ண, ந, ம, ன என வரும் ஆறு மெல்லெழுத்துக்களும் அதிகமாகப் பயின்று வரக்கூடிய வண்ணத்திற்கு மெல்லிசை வண்ணம் என்பர். நற்றிணையில் குன்றியனார் என்னும் புலவரின் நெய்தல் திணைப் பாடலில் இவ்வண்ணம் அமைவதை,

**"ஞான்ற ஞாயிறு குடமலை மறைய**
**மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்"**

என்ற பாடல் அடி உணர்த்துகிறது.

## நெடுஞ்சீர் வண்ணம்

நெட்டெழுத்துக்கள் பயின்று வரும் வண்ணத்திற்கு நெடுஞ்சீர் வண்ணம் என்று பெயர். இதனை தொல்காப்பியர்,

**"நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்"**

என்கிறார். இவ்வண்ணம் நற்றிணையில்,

**"வாழாள் ஆதல் சூழாதோயே"**

என்ற பாடல் அடி சுட்டுகிறது.

## நலிபு வண்ணம்

**"நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்"**

என்ற நூற்பா சுட்டுகிறது. ஆய்த எழுத்துக்கள் பயின்று வரும் வண்ணம் நலிபு வண்ணமாகும்.

**"அஃதே நினைந்த நெஞ்சமோடு**
**இஃது ஆகின்ற யான் உற்ற நோயே"**

இப்பாடல் அடி நற்றிணையில் இடம் பெற்று நலிபு வண்ணத்தை விளக்கி உள்ளது எனலாம்.

## எண்ணு வண்ணம்

எண்ணுதற் பொருள்களில் வரும் ஓசைத் திறம் எண்ணு வண்ணம்.

"எண்ணுவண்ணம் எண்ணுப் பயிலும்
என்பது தொல்காப்பிய நூற்பா."

பதிற்றுப் பத்து பாடல் ஒன்று

"நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரியையே...."

என்று எண்ணு வண்ணத்தைச் சிறப்பாகச் சுட்டுகிறது. நற்றிணையில் இவ்வண்ணம் அமைவதை,

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈண்ம்"

என்ற பாடல் வரி சுட்டுகிறது. இதில் இசை, இன்பம் ஈதல் என்ற மூன்றும் எண்ணுதல் பொருளில் வந்துள்ளதை அறியலாம்.

## தா அ வண்ணம்

"பொய்கை ஊர்க்குப் போவோய் ஆகிக்
கைகவர் நரம்பிற் பனுவற் பாணன்
செய்த அல்லல் பல்குவ வையெயிற்று
ஐதகல் அல்குல் மகளிர் இவன்
பொய் பொதி கொடுஞ்சொல் ஓம்புமின் எனவே"

தா அ வண்ணம் இடையிட்ட எதுகையால் வரக்கூடியது. மேற்கூறிய நற்றிணைப் பாடலில், 'ய்' என்ற எழுத்து தாவுதல் என்னும் பொருளுக்கு ஏற்றாற் போல இடையிட்டு எதுகையைப் பெற்று வருவதை அறியலாம்.

## முடுகு வண்ணம்

நீண்ட அடிகளைக் கொண்டு அராகம் தொடுக்க வருவது முடுகு வண்ணமாகும்.

"முடுகுவண்ண முடிவறியாமல்
அடியிறந் தொழுகி அதனோர் அற்றே"

என்பது தொல்காப்பிய நூற்பா.

"சிறுகுப சிறுகுபு செரீ இ
அறி கரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே"

என்ற நற்றிணைப் பாடலில் முடுகு வண்ணம் பயின்று வந்துள்ளது.

## அகப்பாட்டு வண்ணம்

"அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே"

என்று நூற்பா சுட்டுகிறது. பாட்டு முடிவுற்றபிறகும் அது முடியாதது போலத் தோன்றி நிற்றல் அகப்பாட்டு வண்ணம் ஆகும். இவ்வண்ணம் நற்றிணையில் முல்லைத் திணைப் பாடலில் இடம் பெறுகின்றது.

இப்பாடல் கார்ப்பருவத்தில் தலைவன் வருவதாகக் கூறியதை நினைத்து வருந்திய தலைவிக்குத் தோழி ; தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் இப்போதுதான் தொடங்கிற்று, எனவே பொருள் தேடிச் சென்ற தலைவன் உடனே வருவார் வருந்தாதே என்பதை;

"மலர்ந்த பொய்கைப் பூக் குற்று அழுங்க
அயர்ந்த ஆயம் கன் இனிது படிஇயர்
அன்னையும் சிறிது தணிந்து உயிரினள், இன்நீர்த்
தடங் கடல் வாயில் உண்டு, சில் நீர் என,
மயில் அடி இலைய மாக்குரல் நொச்சி
மனை நடு மௌவலொடு ஊழ்முகை அவிழ,
கார் எதிர்ந்தன்றால், காலை, காதலர்
தவச் சேய் நாட்டார் ஆயினும் மிகப்பேர்
அன்பினர் வாழி தோழி"

என்ற பாடல் சுட்டுகிறது கார்ப்பருவத்தில் வராத தலைவன் நம்மீது அன்புடையவர் எனவே தவிராது வருவார் எனப் பொருள் முடிவு பெற்றிருப்பதைக் காணலாம்.

## முடிவுரை

வண்ணம் என்பது ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடு ஆகும். வண்ணம் பாடலின் சில அடிகளில் வரும் என்பதும் இருபது வகையாக அவை அமைந்து எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை அடிப்படையில் அமைகின்றது என்பதையும், தொல்காப்பிய வண்ணங்களுக்கு ஏற்பச் சில வண்ணங்கள் மட்டும் நற்றிணையில் எவ்வாறு பயின்று வந்துள்ளன; என்பதையும் 'நற்றிணையில் வண்ணம்' சிறப்புறப் புலப்படுத்தியுள்ளது என்பதை உணரலாம்.

---

# வாசகர் வாசகம் (4)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

"தொகைநூலுள் பறவைகள்" எனும் கட்டுரை வழி 15 கோடி ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய ஆர்க்கியோப்டெரிக் என்னும் பறவையோடு சிம்புள், மாங்குயில் எனும் பறவைகள் பண்டைய காலம் தொட்டு இருப்பதையும் அறிய முடிகிறது. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எனைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்னும் பாவேந்தரின் பாடல்வரிகள் நெஞ்சில் நிழலாடின.

வள்ளலாரின் கவிப் பார்வை, அழகியல் பார்வை உயிரிரக்க நெறி, ஆன்ம நேய ஒருமைப்பாடு பற்றியெல்லாம் வேல்முருகனார் நன்கு அலசி, ஆய்ந்து கருத்துக்களைத் தந்திருந்தார். குடும்ப வாழ்வில் தலைவன் தலைவி உடலும் உயிருமாக இருந்ததோடு குழந்தைப் பேற்றில் தாங்கொணா மகிழ்வுற்றிருந்ததையும் ஐந்திணை எழுபதிலிருந்து எடுத்து விளக்கி பிரேம்குமார் இலக்கிய விருந்து படைத்திருந்தார்.

தன் மகளின் சார்பொழுக்கம் கெடாது களவொழுக்கத்திற்குத் தடையாக நின்ற அன்னையர்கள் அறன் இல் அன்னை என்ற பெயரை ஏற்றுக்கு கொண்டதை சங்க இலக்கியங்கள் வழி மகேஸ்வரி அம்மையார் வெளிச்சமிட்டுள்ளார். சக்தி வழிபாடு சங்க காலந் தொட்டு நடந்து வருவதையும் அதனையொட்டி தாயைத் தெய்வமாக வழிபடுவதையும் இலக்கியச் சான்றுகளை முன்னிறுத்தி சந்திரமோகன் நம்மை சங்க காலத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார் என்பதே உண்மை.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்**, திருலோக்கி

# தேடல்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

'தேடல்' எனும் உந்துசக்தி இருந்தால் அன்றிச்
செம்மாந்த வெற்றிகளை அடைவ துண்டா?
நாடுவிட்டுக் காடுசென்ற 'சித்தார்த் தன்' தான்
ஞாலமதில் புத்தர் என உயரக் கண்டோம் !
ஏடுகளைத் தேடிநிதம் பயின்றார் 'அண்ணா';
ஈடில்லா அறிஞர்என ஆனார் ! ஆய்வை
நாடியிங்கே பாடுபட்ட 'எடிசன்' தானே
நானிலத்தை அறிவியலால் வியக்க வைத்தார் !

பதுமைகளாய் இல்லாமல் புதுமை காணப்
பல்வகையில் சிந்தனையை ஓட்ட வேண்டும் !
நதிகூட நடக்காமல் தேங்கி நின்றால்
நன்னீராய் இருப்பதுண்டா? இன்னும் இன்னும்
எதுவுமிங்கே 'விதி' ப்படித்தான் நடக்கு மென்றே
எண்ணுவதை மிதித்திடுவோம் ! மண்ணில் நல்ல
விதையூன்றத் தவறிவிட்டால் விளைச்சல் ஏது?
வெற்றிகளும் 'தேட' லின்றேல் விளைவ தேது?

நெடுந்தூரம் கடந்துவந்த வரலாற் றேட்டை
நீங்களிங்கே பாருங்கள்; கோள மீதில்
படுவேக வளர்ச்சியெலாம் வடிவெ டுக்கப்
பங்களித்தோர் மந்திரமே 'தேடல்' தானே !
'விடியாதா? விடியாதா?' என்றே ஏங்கி
வெறுங்கனவில் மிதப்பதனால் 'விடியல்' உண்டா?
கடிகார நொடிமுள்ளைப் போலே ஓடிக்
கருத்தான 'தேட'லினால் சரிதம் காண்போம் !

# சீவகசிந்தாமணியில் நிமித்தங்கள் – ஓர் இனவரைவியல் பார்வை

க. கனிமொழி
அண்ணாமலை நகர்

## முன்னுரை

மனிதன் உலக வாழ்க்கையின் மீது வைத்துள்ள ஆசையின் காரணமாகவும், பின்னால் நடக்க இருக்கும் நல்ல நிகழ்வு (அ) தீய நிகழ்வு ஆகியவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ள நினைக்கும் உள்ளுணர்வுகளின் உந்துதல் காரணமாகவும் சகுனம் ( அ ) நிமித்தம் பார்த்தல் எனும் நம்பிக்கைகள் தோன்றியிருக்க வேண்டும். மனிதனின் நம்பிக்கை சார்ந்தும் உணர்வு சார்ந்தும் எழுந்த இச்சடங்கு மூலமாகக் குறிப்பிட்ட மக்களின் சமுதாய வாழ்க்கையைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. மானிடவியல் ஆய்வில் சகுனம் சார்ந்த நம்பிக்கைகளும் சடங்குகளும் அச்சமூகத்தின் அல்லது இனத்தின் வரைவியலாகவும் கருதப்படுகின்றன. அந்த வகையில் சீவகசிந்தாமணியின் காலத்தில் இடம்பெறும் இனவரைவியல் கூறுகளில் ஒன்றான சகுனம் சார்ந்த சடங்குகள் குறித்த செய்தியினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## சகுனம் ( அ ) நிமித்தம் பார்த்தல்

சகுனம் அல்லது நிமித்தம் பார்த்தல் என்பது இந்தியாவில் மட்டுமல்லாமல், உலக நாடுகள் பலவற்றிலும் பின்பற்றி வரும் ஒரு பழக்கமாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கிரேக்கத் தொன்மங்களிலும் கதையாடல்களிலும் சகுனம் சார்ந்த நம்பிக்கைகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. "கிரேக்க நாட்டினர் சகுனங்களில் நம்பிக்கை உடையவர்கள்" என்பதை அறிஞர் பூரி எடுத்துக்காட்டுகின்றார். மனிதன் இறப்பச்சம் சார்ந்தும் பயன்பாடு சார்ந்தும் சிந்தித்த காலத்தில் சகுனங்கள் தோன்றியிருக்கலாம். முதன் முதலில் ஆதிவாசிகளிடமே இருந்து வந்துள்ளது என்றும் அவர்கள் நிமித்தங்களைப் பார்ப்பதை அன்றாட வாழ்வியலில் கடைப்பிடித்துள்ளனர் என்றும் கூறுவர்.

"சகுனம் அல்லது நிமித்தம் பார்த்தல் என்பது உலகில் தோன்றிய ஆதிவாசிகளிடமே சாதாரணமாக வழக்கில் இருந்து வந்திருக்கிறது". இவற்றால், சகுனம் பார்த்தல் எனும் மரபு மனிதன் தோன்றிய நாளிலிருந்தே இருந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது.

நிமித்தம் பார்த்தல் குறித்த பல குறிப்புகளைப் பழங்கால சாஸ்திர நூல்களிலும், சங்க இலக்கியங்களிலும், காவியங்களிலும், தமிழ்க் காப்பியங்களிலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். நிமித்தம் பார்த்தலில் இயல்பு குறித்தும் அதனைக் குறித்துப் பேசிய இலக்கியங்கள் குறித்தும் விளக்கும் க. இரத்னம்,

"நல்ல நிமித்தம் பார்க்கப் பஞ்சபட்சி சாஸ்திரம் பயன்படுத்தப்படுகிறது. இது பற்றிய விவரங்கள் பஞ்சாங்கங்களிலும் இடம் பெற்றுள்ளன. உடம்பின் பகுதிகள், கண்கள் ஆகியவற்றின் துடிப்புகள் பற்றிய நிமித்தங்கள் பண்டைய இலக்கியங்களில் விரிவாக இடம் பெற்றுள்ளன. சாகுந்தலம், ரகுவம்சம் ஆகிய காளிதாசன் காவியங்களில் மட்டுமின்றி தமிழ்க் காப்பியங்களிலும் இத்தகைய குறிப்புகள் காணப்படுகின்றன" என்று விளக்குவார்.

பறவைகள் மூலமாகவும், உடல் உறுப்புகள் மூலமாகவும் நிமித்தங்கள் அறியப்பட்டன என்பது இதனால் தெளிவாகின்றது. தொல்காப்பியர் நற்றாய் கூற்றுக் குறித்து விளக்கும் சூழலில்,

"மன்னும் நிமித்தம்"

எனும் சொல்லால் இதனைக் குறித்துள்ளார்.

நிமித்தம் பார்த்தல் (அ) சகுனம் என்பது சங்க காலத்தில் விரிச்சி என்ற பெயரில் வழங்கி வந்துள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை விரிச்சி கேட்டலின் தன்மைக்கு,

"வேண்டிய பொருளின் விளைவு நன்கு அறிதற்கு
ஈண்டு இருண் மாலைச் சொல் ஓர்த் தன்று"

என இலக்கண வரையறையும் கொடுத்துள்ளது. ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பு அச்செயலால் பின்னர் நடக்கப் போகும் நிகழ்வினை முன்கூட்டியே அறிவதற்குச் சகுனம் பார்க்கும் தன்மையே விரிச்சி என

வழங்கப்பட்டது என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை வரையறுக்கக் காணலாம். இத்தகு நற்சொல் கேட்டல் குறித்து முல்லைப் பாட்டு,

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்"

என்று விளக்கிச் செல்கிறது. நற்சொல் வேண்டிச் செல்லும் பெருமுது பெண்டிர்கள் தெய்வம் வேண்டி நெல்லும் முல்லை மலரும் தூவி வணங்கியமையும் புலப்படுகிறது.

## சீவகசிந்தாமணியில் கண் நிமித்தம் பார்த்தல்

சிந்தாமணி காலச் சமுதாயத்திலும் நிமித்தம் பார்த்தல் என்ற நம்பிக்கை மக்கள் வாழ்க்கையில் இருந்தமைக்கான குறிப்புகள் காணப்படுகின்றன. பெண்கள் கண் இடனாகத் துடித்தல் நன்னிமித்தமாகும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதைச் சிந்தாமணி வழி அறியமுடிகின்றது. சீவகன் தன்னைக் காண வருவான் என்று விசையையின் இடக்கண் துடித்ததாகத் திருத்தக்கதேவர் பாடுகின்றார். இதன் மூலம் இடக்கண் துடித்தலை விசையை நன்னிமித்தமாகக் கருதினாள் என்பது உணரப்படுகின்றது.

இடக்கண் துடித்தது என்பதை,

"எல்லிருட் கனவிற் கண்டேன் கண்ணிட னாடு மின்னே"

எனும் தொடர் வெளிப்படுத்தியமை நோக்குதற்குரியது. சிலப்பதிகாரத்திலும் உடல் உறுப்புகளில் ஒன்றான கண் துடித்தலை நிமித்தமாகக் கருதினர். கோவலன், மாதவியைப் பிரிவான் என்று மாதவியின் வலக்கண்ணும், கோவலன் கண்ணகியிடம் வருவான் என்று கண்ணகியின் இடக்கண்ணும் துடித்ததாகச் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது.

"கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்து நீருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன"

இதனால், பின்னால் நடக்க இருக்கும் நல்ல நிகழ்வு ( அ ) தீயநிகழ்வை முன்கூட்டியே எடுத்துரைப்பதாகச் சகுனம் பார்த்தல் என்ற நம்பிக்கை இருப்பதை உணர முடிகின்றது. சீவக சிந்தாமணியில் கோவிந்தன் போருக்குச் செல்லும் போது தனது வலக்கண் துடித்தலால் நம்பிக்கையின்மை ஏற்படுவதாகக் கூறுமிடத்துத் தீயநிமித்தம் சார்ந்த பதிவு நிகழ்த்தப் பெற்றுள்ளது. இதனை,

"மிறைவன் கண்வல னாடிற் றியைந்தரோ"

என்று குறிப்பிடுவதால் உணரலாம்.

சீவகனைக் கட்டியங்காரன் சிறை செய்ய, எண்ணிய நிலையில் சீவகன், சுதஞ்சணனை நினைத்தான். இதனால் இடக்கண் துடிக்கப் பெற்ற சுதஞ்சணன் சீவகனை சிறையிலிருந்தே விடுவித்தான், என்பதாக வரும் செய்தியில் இடம் துடிக்கும் சூழல் விளக்கம் பெற்றுள்ளது.

சுதஞ்சணனின் இடக்கண் துடித்ததை,

"செயிரிற் றீர்ந்த செழுந்தாமரைக் கண்ணிட னாடலு"

எனும் வரிகளால் சுதஞ்சணனின் இடக்கண் துடித்தலால், துன்பத்தில் இருந்த சீவகனைக் காப்பாற்றினான் என்பதை அறியமுடிகின்றது. கம்ப இராமாயணத்திலும் இடம் துடித்தல் வலம் துடித்தலுக்கான நிமித்தங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அசோகவனத்தில் சிறைப்பட்ட சீதை திரிசடையிடம் தனக்கு தோன்றிய நன்னிமித்தங்களைக் கூறுமிடத்து,

"பொலந்துழ மருங்குலாய் புருவம் கண்ணுதல்<br>வலம் துழக்கின்றில வருவது ஓர் கிலேன்"

என வலம் துடிக்காமல் இடம் துடிப்பதாகவும் அது நலம் பெற துடிப்பதாகவும் பாடுகிறார். மேலும், இராமன் மிதிலை நோக்கி வந்த போது இனியன (இடம் துடித்தல்) (362 : 3) துடித்ததாகவும் அரியணை துறந்து காடுசெல்ல நேரும் போது வலம் துடித்ததாகவும் ( பா. 363 ) இராவணன் தன்னை கவர வந்த போதும் வலம் துடித்ததாகவும் பாடுகிறார் (364). இவற்றால் இடம் துடித்தால் நன்மையும், வலம் துடித்தால் தீமை நிகழுமென்பது பழந்தமிழர் மரபாக இருந்தது என்பது அறியப் பெறுகிறது. இதே நிலையில், கட்டியங்காரனுக்குக்

கேடு நிகழப் போகிறது என்பதை உணர்த்தும் முகமாகக் காமக் கிழத்தியரின் வலக்கண்கள் துடித்தன என்னும் சூழலைத் திருக்கத் தேவர் பதிவு செய்கிறார். இது,

"போக மகளிர் வலக்கண்க

துடித்த......................"

எனும் அடிகளால் உணர்த்தப் பெற்றுள்ளது.

சீவகன் துறவுமேற்கொள்ளப் போகிறான் என்ற செய்தியை அறிந்த பெண்களுடைய வலக்கண்கள் துடித்தன. இதனை,

"றூவல ரொலிய லார்தம் வலக்கண்க டுடித்த வன்றே"

எனும் அடிகளால் அறியலாம்.

எனவே, சீவகசிந்தாமணியின் கால சமுதாய மக்கள் இடக்கண் துடித்தலை நன்னிமித்தமாகவும், வலக்கண் துடித்தலை தீயநிமித்தமாகவும் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

## புள்நிமித்தம் பார்த்தல்

சீவக சிந்தாமணியில் உடல் உறுப்பான கண் துடித்தலை வைத்துச் சகுனம் பார்ப்பது மட்டுமல்லாமல், பறவைகளின் ஒலிகளை வைத்துச் சகுனம் பார்த்தலும் இருந்தமையை அறிய முடிகின்றது. சோலையில் பூக்கொய்து கொண்டிருந்த பதுமையினைப் பாம்பு தீண்ட, உயிருக்குப் போராடிய நிலையில், இனிமையான ஒலியினையுடைய யாழினைப் போல் ஆந்தை அமர்ந்து பாடுவதால், பதுமைக்கு இறப்புக் கிடையாது என்னும் நல் நிமித்தம் தோன்றுவதாகத் திருக்கத்தேவர் குறிக்கிறார். இதனை,

*"நங்கைக் கின் றிறத்த லில்லை*

*................................*

*குவி முகிழ் முகட்டி னங்கட்*

*டங்குதே ரைவ யாழிற்*

*நானிருந் தாந்தை பாடு"*

எனும் வரிகளால் அறியலாம். ஆந்தை சாப்பறவை என்றும் தீயநிமித்தம்

தோன்ற அலறுவது என்றும் கூறிவந்த வழக்கிற்கு மாறாக ஆந்தை இனிமையாய் பாடுவது நன்னிமித்தமாக அறியப்பட்டுப் பதுமை பிழைத்துக் கொள்வாள் என்றும் நம்பிக்கையை இவரின் வரிகள் உணர்த்துகின்றன.

மேலை நாட்டினர் நாடகங்களிலும் இத்தகைய புள் நிமித்தங்கள் பற்றிய பதிவுகள் பல காணக்கிடக்கின்றன. "அலெக்சாண்டர், சிசரோ ஆகியவர்களைத் தங்களின் மரணத்திலிருந்து எச்சரித்தப் பறவை ரேவன் என்று அறிகிறோம்" என்று குறிப்பதால் இவ்வழக்கம் உலகம் முழுவதும் உள்ள நம்பிக்கையாக இருப்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. பிளைனி என்பார், "ரேவன் என்ற பறவை இனம் அதிர்ச்சியினால் தம் சப்தத்தை விழுங்கும் போது அவை மிக்க சகுனம் வாய்ந்ததாக நம்பப்பட்டது" என்கிறார்.

சீவகசிந்தாமணியில் காட்டப்படும் ஆந்தையின் இயல்பும், மேலைக் காவியங்கள் காட்டும் "ரேவன்" எனும் பறவை இனமும் நன்னிமித்தங்கள் எழுப்பும் பறவைகளாக அறிவுத்தப்படுதலையும் இதன் வழித் தெரியலாம். மேலும், பதுமைக்கு அரவுதீண்டப் போகிறது என்பதனை அறிவிக்கும் பொருட்டாக பறவையின் குரல் தீய நிமித்தம் உணர்த்துவதாகவும் சிந்தாமணி காட்டுகின்றது. இதனை,

> **"வடிமலர்க் காவி னன்று வண்டளிர்ப் பிண்டி நீழல்**
> **முடிபொருள் பறவை கூற முற்றிழை நின்னை நோக்கிக்**
> **கடியதோர் கௌவை செய்யுங் கட்டெயிற் றரவி னென்றேன்"**

பறவையின் குரல் தீமையுணர்த்தியதால், பதுமைக்குத் தீங்கு நிகழப் போகிறது என்பதை அறிய முடிகின்றது. அதன் காரணமாகவே பதுமைக்குப் பாம்பு தீண்டியது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலையில் காரி என்னும் பறவையின் குரல் தீயநிமித்தமாக கருதப்படுகிறது என்பதை இதற்குச் சான்று காட்டலாம்.

> **"வெட்சி மலைய விரவார் மணிநிரைக்**
> **கட்சியுட் காரி கலுழ்ம்"**

எனும் அடிகள் அப்பறவைப் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

## ஊர்வன சார்ந்த நிமித்தங்கள்

உடல் உறுப்புகள், பறவைகள் மட்டுமின்றி ஊர்வனவற்றில் பல்லி, பாம்பு முதலான உயிரினங்களும் நிமித்தங்களை வெளிப்படுத்தவல்லவை என்று பழந்தமிழர் நம்பியுள்ளனர். சீவகன் திரும்பி வருவான் என்பதை அறிவிக்கும் பொருட்டாகப் பல்லி நல்ல இடத்தில் ஒலித்ததாகக் காட்டும் திருத்தக்கத் தேவர் பழந்தமிழரின் நம்பிக்கையைப் புலப்படுத்துகிறார். இதனை,

**"பல்லியும் பட்ட பாங்கர்"**

எனும் அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

பறவைகள், பல்லிகள் மட்டுமல்லாமல் பாம்புகளும் பின்னால் நடக்க இருப்பதை முன்னால் தெரிவிக்கும் ஆற்றல் உடையவை என்பர்.

"புதர் மனிதர்கள் (Bushman) என்றொரு மனித இனத்தவர்கள் தங்களின் மரணத்தை முன்கூட்டியே அறிவிக்கவல்லது பாம்பு என நம்பினர்" என்னும் குறிப்புப் பாம்புகளின் வழி அறியப்படும் நிமித்தங்களை உணர்த்துகிறது. சீவக சிந்தாமணியில் பாம்பு சார்ந்த நிமித்தக் குறிப்புகள் காணப் பெறவில்லை.

## முடிவுரை

மனித வாழ்க்கையில் நிமித்தம் பார்த்தல் என்பது அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மனிதனின் வாழ்வு இறப்புச் சார்ந்த நம்பிக்கைகளின் காரணமாகவே நிமித்தம் பார்த்தல் நிகழ்கிறது சில நேரங்களில் சகுனங்கள் உண்மையாகி விடுகின்றன. இந்நம்பிக்கைக்குக் காரணம் மனிதனின் எண்ண அலைகள் எனலாம். தற்காலத்திலும் மாற்றங்கள் எவ்வளவு வந்தாலும், முன்னோர்கள் கடைப்பிடித்த சில நம்பிக்கைகள் மாற்றமடையவில்லை என்பதே உண்மை. இத்தகைய நம்பிக்கைகள் மரபு வழி தொடர்வதாக இருப்பதையும் மறுக்கவியலாது. சிந்தாமணிக்கால சமுதாயத்திலும் சகுனங்கள் மீது நம்பிக்கை கொண்டிருத்தல் காணப்படுகிறது. இதனால், அக்காலச் சமுதாய மரபும் மனிதப் பண்பாடும் அறியப் பெறுகிறது.

# நற்றிணையில் பாடவேறுபாடு
## (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உரையை முன்வைத்து)

ப. நிர்மலா
அண்ணாமலை நகர்

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கிய, இலக்கணங்கள் இன்றும் நாம் புரிந்து கொள்ளும் வண்ணம் உதவுவது அவற்றிற்கு எழுதப்பட்ட 'உரைகள்' தாம். அவ்வுரைகளை மக்களிடையே கொண்டுச் சென்று சிறப்புடன் வாழவைத்த பெருமைக்குரியவர்கள் உரையாசிரியர்கள். தொகை நூல்களில் ஒன்றாகத் திகழக் கூடியதும், நல் என்னும் அடைமொழி கொண்டு மனித வாழ்வியலுக்குத் தேவையான ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் நற்றிணைக்கு முதல் உரையமைத்தவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் ஆவார். இவரைத் தொடர்ந்து இந்நூலிற்கு விளக்கமான உரையினைத் தந்தவர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை ஆவார். இவர்,

> "நூலுக்கு நூலருமை காட்டுவதில் நுண்ணறிஞர்
> மேலுக்குச் சொல்லவில்லை வேர்ப் பலாத் தோலுக்குள்
> உள்ள சுவை கொடுக்கும் உண்மை உழைப்பாளன்
> அள்ளக் குறையாத ஆறு"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் போற்றப் பெறுபவர் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி பிள்ளை. இவர் நற்றிணைக்கு பல்வேறு உரை மரபுகளை கையாண்டு இருந்தாலும் பாட வேறுபாட்டிற்கு என்று தனியிடம் கொடுத்துள்ளார் என்பதைக் கருத்தில் கொண்டு, இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## பாடவேறுபாடு

மூல நூலில் உள்ள (original texts) ஒரு சொல்லுக்குப் பதிலாகப் பொருள் உள்ள அல்லது பொருளற்ற வேறொருச் சொல் அமைந்திருப்பதற்குப் பாடவேறுபாடு (Variations) என்று பெயர். இதனை

பாடபேதம், பாடாந்தரம், பிரதிபேதம் என்று அழைக்கின்றனர் உரையாசிரியர்கள்.

இவ்வேறுபாடுகளை மூல நூலில் தெரிவு செய்து அதற்குச் சரியான பாடத்தை எடுத்து இயம்புவது உரையாசிரியரின் பணியாகும். ஒரு பாடலில் ஒன்று தான் மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஒன்றிற்கு மேற்பட்ட பாடவேறுபாடுகளும் இடம் பெறலாம். அவ்வகையில் நற்றிணைக்கு உரையமைத்த ஔவை சுமார் 1500-க்கு மேற்பட்ட வேறுபாடுகளை எடுத்தியம்பியுள்ளார். இவை,

1. அரசினர் கையெழுத்து நூல் நிலைய ஏடு
2. மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏடு
3. டொம்மச்சேரி கருப்பையாத் தேவர்
4. புதுப்பட்டி சிவ.மு. முத்தையா செட்டியார் ஏடு

என்ற நான்கு ஏடுகளிலிருந்து ஒப்பிட்டு நோக்கி இப்பதிப்பை உருவாக்கியுள்ளதாக முன்னுரையில் இடம் பெற்றுள்ளது.

## நற்றிணையில் பாடவேறுபாடு

பகற்குறி வந்து சென்ற தலைமகனைத் தோழி வரைவுகடாயது கூறிய நெய்தல் பாடலான,

“முழுவிசைப் புணரி எழுதரும்
உடைகடற் படப்பையெம் உறைவின் ஊர்க்கே” (67 : 12)

என்ற பாடலில் உடைகடற் படப்பை எனவரும் தொடருக்குப் படுகடற்படப்பை என்னும் பாடம் கொண்டுள்ளார். முதல் பாடத்திற்கு அலை எழுந்த உடைந்து விழும் கடற்கரை என்றும், இரண்டாம் பாடத்திற்கு ஒலிக்கின்ற கடலை உடைய ஊர் என்றும் பொருள் - இவ்விரு பொருள்களும் கடலின் இயல்பைச் சுட்டுவதால் இங்கு ஔவையின் பாடமும் ஏற்புடையதாகும்.

“சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேரத்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற (நற். 149)”

என வரும் பகுதி, தெருக்களில் கூடி நின்று கடைக் கண்ணால் சுட்டி நோக்கி

மூக்கின் நுனியில் சுட்டு விரலை வைத்துத் தூற்றும் செய்தி இதில் இடம் பெற்றுள்ளது. 'மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி' எனவரும் தொடரை ஔவை 'மூக்கின் ஊக்கி வாய்விரல் பொத்தி' என பாடம் கொண்டுள்ளார். உரையாசிரியர் தன் அனுபவத்தால் கண்ட இப்பாட்டத்திற்கு "ஒருத்தி கூறுவாள், மற்றொருத்திவியப்பால் வாயில் கை பொத்திப் பெருமூச் செறிந்து இச்செய்தியின் புதுமையை வியந்து நிற்பாள், அப்பொழுது தலைவியின் உறவினரோ அவ்வழி வருவாராயின் பேசியிருந்த பெண்டிர் அனைவரும் பேசாத பெரு நிலையுற்றுத் தம் கையால் வாய் பொத்திப் பெருமூச் செறிந்துவார் என்பதைத் தன்னுடைய உரையில் பாடமாகக் கொண்டதற்கு விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறு இவரது உரையில் பல்வேறு வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் நூல்களில் பாடவேறுபாடு என்ற நூலில் வெ. பழனியப்பன் ஆய்வாளரும் ஆராய்ச்சியாளரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுத்து, சொல், பொருள், இலக்கணம், ஒப்புமை என்று ஐந்து நிலையில் இவ்வேறுபாடுகளை பிரித்துக் காட்டியுள்ளார். அந்த அடிப்படையிலும் ஔவையும் தனது உரையில் வல்வில் ஓரிகானம் நாறி (நற். 6 : 9) என்ற அடியில் 'வல்வில் ஓரிக்கானம் நாறி' என்பதில் ஒற்று சேர்க்கும் போதும், பந்தொடு வைஇய செல்வோள் (நற். 12 : 6) என்பதில் 'கவைஇய' என்னும், எழுத்தளவில் மாற்றம் கொண்ட வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன.

'மழைக்கண் ஈரிய கலுழ்தலில் அன்னை' (நற். 1 : 5) என்பதில் 'ஈரிய' என்ற சொல்லை விடுத்து 'மழைக்கண் கலுழ்தலின் அன்னை' என்று சொல் நிலையிலும், 'சாரலின்' (நற். 14 : 7) என்பதில் 'இன்' என்னும் வேற்றுமையுருபு விடுபட்டு 'சாரல்' என்று இலக்கண அடிப்படையிலும் பாடம் கொண்டுள்ளார்.

மேற்கூரிய வேறுபாடுகள் மட்டுமல்லாது வருந்துணையாகிய (நற். 26 : 7) என்பதற்கு கெடுதுணையாகிய என்று வேறுபாடு கொண்டதுடன் இது புதுப்பட்டியேட்டில் காணப்படுகிறது என்றும், சுடர்நுதல் ( நற். 250:7) என்பதற்கு திருநுதல் என்று பாடம் கொண்டதுடன் இது செட்டியார் தேவர் ஏடுகளில் கண்டது எனவும், காட்டுவன இவரது ஆராய்ச்சியின் நேர்மையைப் புலப்படுத்துவதாக அமைகின்றன.

## முடிவுரை

பாடவேறுபாடுகள், பல்வேறு உரையாசிரியர்கள் பாடம் தோன்றிய காலம் முதலாக உருக் கொண்டு வழங்கி வருகின்றன. அவை பிற்காலத்தில் முன்னர்க் கூறியாங்குப் பற்பல சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்திருக்கலாம். அவற்றை ஒன்று திரட்டி பல்வேறு ஏடுகளைக் கொண்டு நுனித்தறிந்து பாடம் கொண்டவர் ஔவை அவர்கள், அவர் ஏடுகளை ஆர்த்துடன் படித்து நற்றிணைக்கு உரையமைத்ததால் பெயர் தெரியாத பல பாட்டுக்களில் ஆசிரியர் பெயர்களும் அவரது வரலாற்றுக் குறிப்புகளும் இவரது உரையில் இடம் பெறுவது போற்றுதற்குரியது.

---

# வாசகர் வாசகம் (5)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர்
அய்யா அவர்களுக்கு நல்வணக்கம்.

தமிழ் இலக்கண அடிப்படையில் ஆங்கில ஒலிப்பு முறை அமைந்திருப்பதை ந்ன்கு ஆய்வு செய்து திரு பெருமாள்சாமி நன்கு தெளிவுபடுத்தி விளக்கியிருந்தமை மிகச் சிறப்பு. கம்பன் கவித்துவத்தில் வாலியின் ஆளுமையையும் இராமனின் ஆற்றலையும் அவர் வாக்கை முன்னிறுத்தி திரு. நடராசன் அலசி, விரித்து, உரைத்திருந்ததும் மிக நன்று. கவிவேந்தரின் கவிதை பிற செல்வங்களை விட, மனித உயிரை விட நூல் செல்வம் பெருஞ்சிறப்புக்குரியது என்பதை மெய்ப்பித்து, வள்ளுவம் காட்டியுள்ள 'பிறனில் விழையாமை'யை பிற பழம்பெரும் நூல்களை மேற்கோள் காட்டி திரு. ஐம்பொறியார் ஆண் இனத்திற்கு நல்லறிவு புகட்டியிருந்தார்.

தொல்காப்பியரின் இலக்கண வரன்முறைக் சென்று கலித்தொகையான இலக்கியம், மரபு மீறியுள்ள காட்சிகளை திருமதி. யாழினி நன்கு வடம் பிடித்துக் காட்டியிருந்தார். செந்தமிழின் இலக்கியப் பணி போற்றற்குரியது.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்,** திருலோக்கி

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 November 2012 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.